# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2023 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

[*2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2023, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 66.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2023 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்**

[*2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ. 63/2021*

**(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்*

*101 ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 5 ஆம் பிரிவு, "தீர்வை" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

""ஆவணம்" என்பது, இலத்திரனியல் வடிவத்திலான ஆவணமொன்றையும் உள்ளடக்குகின்றது;

"இலத்திரனியல் வடிவத்திலான ஆவணம்" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது -

(அ) ஏதேனும் சமகால பதிவுசெய்தலை உள்ளடக்கியுள்ள ஏதேனும் தகவல் அல்லது அதன் மீள்தயாரிப்பு அல்லது 1995 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சான்று (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கருத்தெல்லையினுள் கணினியொன்றினால் தயாரிக்கப்பட்ட கூற்றொன்றில் உள்ளடங்கியுள்ள ஏதேனும் தகவல்;

(ஆ) 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் கருத்தெல்லையினுள்ளான ஒரு தரவுத் தகவலில், இலத்திரனியல் ஆவணத்தில், இலத்திரனியல் பதிவேட்டில், இலத்திரனியல் தொடர்பாடலில் அல்லது இலத்திரனியல் வடிவத்திலான வேறு தகவலில் அல்லது கொடுக்கல்வாங்கலில் உள்ளடங்கியுள்ள ஏதேனும் தகவல்;

(இ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான இலத்திரனியல் வடிவத்திலான அத்தகைய வேறு ஆவணம் அல்லது தகவல் அல்லது பதிவேடு அல்லது தொடர்பாடல் அல்லது கொடுக்கல்வாங்கல்;

(ஈ) கணினித் தொழில்நுட்பவியலை உள்ளடக்குகின்றதான ஏதேனும் ஊடகத்திலான உபாயங்களில், பிரிமாறிகளில் மற்றும் பாதுகாப்புச் சேமிப்பு முறைமைகளில் களஞ்சியப்படுத்தப்படுகின்ற அத்தகைய வேறு ஆவணம் அல்லது தகவல் அல்லது பதிவேடு அல்லது தொடர்பாடல் அல்லது அழிக்கப்பட்டுள்ளதான அத்தகைய ஏதேனும் ஆவணம் அல்லது தகவல் அல்லது பதிவேடு அல்லது தொடர்பாடல்; அல்லது

(உ) கணினித் திரையொன்றில் அல்லது அச்சுப்படியொன்றில் பொதுவாக கட்புலனாகாத எவையேனும் மேனிலைத் தரவுகளும் மற்றும் வேறு உட்பொதிக்கப்பட்ட தரவுகளும்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் "கேட்புக்கு முன்னதாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முன்விளக்கக் கலந்தாய்வுக்காக முதலில் நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன்னதாக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) "கேட்புக்கு முன்னதாகவும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முன்விளக்கக் கலந்தாய்வுக்காக முதலில் நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன்னதாகவும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும்:-

"ஒன்றிணைக்காது விட்டமைக்கான அல்லது பிழையாக ஒன்றிணைத்தமைக்கான ஆட்சேபனைகள் முன்விளக்கக் கலந்தாய்வுக்காக முதலில் நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன்னர் எடுக்கப்படுதல்.".

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் Xஅ (பிரிவு 79அ) இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் அத்தியாயம் இடப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் Xஅ இனை மாற்றீடு செய்தல்*

"அத்தியாயம் **Xஅ**

**முன்விளக்கக் கலந்தாய்வுக்கான நாளை நிர்ணயித்தல் பற்றி**

*முன்விளக்கக் கலந்தாய்வுக் கட்டளைக்கான தேதி* 79அ. நீதிமன்றமானது -

(அ) மறுமொழியைக் கோப்பிடுவதன்மேல்; அல்லது

(ஆ) எதிர்மறுமொழியொன்று அனுமதிக்கப்படுமிடத்து, அத்தகைய எதிர்மறு மொழி கோப்பிடப்படினுஞ்சரி இல்லா விடினுஞ்சரி, அந்த எதிர்மறுமொழியைக் கோப்பிடுவதற்காக அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியின் கடைசி நாளன்று,

ஒன்றில் வழக்குக்கான எல்லாத் திறத்தவர்களினதும் முன்னிலையில் அல்லது சமுகமளித்துள்ளவர்களான அத்தகைய திறத்தவர்களின் முன்னிலையில், முன்விளக்கக் கலந்தாய்வுக்கான அத்தகைய தேதி தொடங்கப்படுவதற்கான அத்தகைய தேதியிலிருந்து மூன்று மாதங்களைவிடக் குறையாததும் ஐந்து மாதங்களை விஞ்சாததுமான தேதியொன்றை நியமித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் Xஆ என்னும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் Xஅ என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் அத்தியாயம் Xஆ என்றவாறாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"அத்தியாயம் Xஆ

**முன்விளக்கக் கலந்தாய்வுக்கு முன்னர் எடுக்கப்பட வேண்டிய முன்விளக்க நடபடிகள்**

முன்விளக்கக் கலந்தாய்வுக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் எடுக்கப்பட வேண்டிய முன்விளக்க நடபடிகள்

79ஆ. திறத்தவர்கள், வழக்கானது முன்விளக்கக் கலந்தாய்வுக்காக நிர்ணயிக்கப்பட முன்னர், அத்தகைய திறத்தவர்களினால் எடுக்கப்படக்கூடிய வேறேதேனும் முன்விளக்க நடபடிக்கு மேலதிகமாக -

(அ) எழுத்திலானதும் அப்போதைக்கு உத்தேசிக்கப்பட்டதுமான ஒப்புதல்களையும் மற்றும் நிகழ்வு மற்றும் சட்டம் பற்றிய வழக்கெழு வினாக்களையும்;

(ஆ) (i) விளக்கத்தில் அத்தகைய திறத்தவர்களினால் அழைக்கப்பட வேண்டிய சாட்சிகளின் நிரல்களையும்; அத்துடன்

(ii) அத்தகைய திறத்தவர்களினால் நம்பப்படுகின்றவையும் மற்றும் விளக்கத்தில் காண்பிக்கப்பட வேண்டியவையுமான ஆவணங்களின் நிரல்களையும்;

(இ) அத்தகைய திறத்தவர்களின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள ஆவணங்கள் பற்றிய நிரல்களில் நிரற்படுத்தப்பட்ட ஆவணங்களின் பிரதிகளையும்,

முன்விளக்கக் கலந்தாய்வுக்காக முதலில் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னரும் மற்றும் அதன் சேர்ப்பிப்புக்கான எண்பிப்புடன் மற்றெல்லாத் திறத்தவர்களுக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னரும் முப்பது நாட்களை விடக் குறையாமல் நீதிமன்றப் பதிவகத்துக்கு அளித்தல் வேண்டும்.

ஆவணங்களை இலத்திரனியல் வடிவத்தில் அளித்தல்

79இ. (1) 1995 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சான்று (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திலும், 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்திலும் அடங்கியுள்ளவற்றுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், எவரேனும் திறத்தவர் ஏதேனும் ஆவணத்தை இலத்திரனியல் வடிவத்தில் அளிப்பதற்கு உத்தேசிக்கின்ற விடத்து, அத்தகைய ஆவணங்களை அளிப்பது தொடர்பில் இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இலத்திரனியல் வடிவத்தில் ஆவணங்களை அளிப்பற்கு உத்தேசிக்கின்ற எவரேனும் திறத்தவர் எதிர்த் திறத்தவருக்கு அல்லது திறத்தவர்களுக்கு அறிவித்தல் கொடுத்தபின்னர், முன்விளக்கக் கலந்தாய்வுக்காக முதலில் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் முப்பது நாட்களுக்குக் குறையாமல் பின்வரும் ஆவணங்களை நீதிமன்றத்தில் கோப்பிடுதல் வேண்டும் -

(அ) இலத்திரனியல் வடிவத்திலான ஆவணங்களின் சுட்டெண்ணொன்றுடன் அத்தகைய ஆவணங்களின் நிரல்; அத்துடன்

(ஆ) அத்தயை சான்றின் தன்மையை விளங்கிக்கொள்வதற்குத் திறத்தவரை இயலச்செய்விக்கப் போதுமானவாறான அத்தகைய ஆவணங்களின் பிரதியொன்று அல்லது பிரதிகள்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எத்திறத்தவருக்கு அறிவித்தலொன்று கொடுக்கப் பட்டுள்ளதோ அந்த எவரேனும் திறத்தவர், அத்தகைய அறிவித்தலைப் பெற்றதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள், பின்வருவனவற்றை அணுகுவதற்கும் சோதனையிடுவதற்குமென, அத்தகைய அறிவித்தல் கொடுக்கும் திறத்தவரிடமிருந்தான அனுமதிக்காக விண்ணப்பிக்கலாம் -

(அ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தில் அளிக்கப்படுவதற்கு நாடப்பட்ட இலத்திரனியல் வடிவத்திலான ஆவணங்கள்;

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட இலத்திரனியல் வடிவத்திலான ஆவணங்களை, விடயத்துக்கேற்ப, தயாரிப்பதற்கு, மீளத்தயாரிப்பதற்கு, தோற்றுவிப்பதற்கு, உருவாக்குவதற்கு, அனுப்புவதற்கு, பெறுவதற்கு, களஞ் சியப்படுத்துவதற்கு, வெளிக்காட்டு வதற்கு, தொடர்பாடுவதற்கு அல்லது செயல்முறைப்படுத்துவதற்குப் பயன் படுத்தப்பட்ட இயந்திரம், உபாயம், கணினி அல்லது தகவல் முறைமை; அத்துடன்

(இ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்களின் தயாரிப்பு, மீள்தயா ரிப்பு, தோற்றுவிப்பு, உருவாக்கம், அனுப்புகை, பெறுகை, களஞ்சியப் படுத்துகை, வெளிக்காட்டுகை, தொடர் பாடல் அல்லது செயல்முறைப்படுத் துகை தொடர்பிலான எவையேனும் பதிவேடுகள்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் அணுகுவதற்கும் மற்றும் சோதனையிடுவதற்குமான அனுமதிக்கான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், இலத் திரனியல் வடிவத்தில் அத்தகைய ஆவணங்களை அளிப்பதற்கு உத்தேசிக்கின்ற திறத்தவர், நியாயமான காலத்தினுள் ஆனால், அத்தகைய விண்ணப்பத்தைப் பெற்றதன்பின்னர் பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கின்ற திறத்தவருக்கு அல்லது அவரது முகவர்களுக்கு அல்லது நியமத்தர்களுக்கு விண்ணப்பத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட இலத்திரனியல் வடிவத் திலான அத்தகைய ஆவணங்கள், இயந்திரம், உபாயம், கணினி, தகவல் முறைமை அல்லது

பதிவேடுகளை அணுகுவதற்கும் மற்றும் அவற்றைச் சோதிப்பதற்கும் நியாயமான வாய்ப்பொன்றை வழங்குதல் வேண்டும்.

(5) (அ) இலத்திரனியல் வடிவத்தில் ஆவணங்களை அளிப்பதற்கு உத்தேசிக்கின்ற திறத்தவர் (3) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பிக்கப்பட்டவாறான அணுகலுக்கும் மற்றும் சோதனைக்கும் அனுமதியளிக்க இயலாதிருக்கின்றவிடத்து அல்லது அனுமதியளிக்காதவிடத்து; அல்லது

(ஆ) திறத்தவர்கள் -

(i) இரண்டாம் உட்பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தல் தொடர்பிலான, அல்லது

(ii) மூன்றாம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட அணுகுகைக்கும் சோதனைக்குமான விண்ணப்பமொன்று தொடர்பில் அல்லது அத்தகைய அணுகுகையினதும் சோதனையினதும் முறை மற்றும் அளவு தொடர்பிலான

ஏதேனும் கருமம் பற்றி உடன்பட இயலாதவர்களாக இருக்கின்றவிடத்து, நீதிமன்றமானது இருதிறத்தவர்களுள் ஒரு திறத்தவரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல், நீதிநலன் தேவைப்படுத்தக்கூடியவாறாக அத்தகைய கட்டளையை ஆக்கலாம் அல்லது அத்தகைய பணிப்பை வழங்கலாம்.

(6) மூன்றாம் அல்லது (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியானது ஒவ்வொரு விடயத்தினதும் விசேட சூழ்நிலைகளின் அடிப்படையில் நீதிமன்றத்தின் தற்றுணிபில் நீடிக்கப்படலாம்.

(7) இப்பிரிவின்கீழ் இலத்திரனியல் வடிவத்திலான ஏதேனும் ஆவணத்தை அளிப்பதற்கு உத்தேசிக்கின்ற எவரேனும் திறத்தவர் -

(அ) இரண்டாம் உட்பிரிவின்கீழான அறிவித்தலைக் கொடுக்கத் தவறுகின்றவிடத்து;

(ஆ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அணுகுகைக்கும் மற்றும் சோதனைக்குமான விண்ணப்பம் செய்யப்படுவதன்மேல் அதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்கத் தவறுகின்றவிடத்து; அல்லது

(இ) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு அல்லது பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து,

அத்தகைய திறத்தவர், எத்தகைய இலத்திரனியல் வடிவத்திலான ஆவணங்கள் தொடர்பில் தவறுதல் இடம்பெற்றதோ அத்தகைய இலத்திரனியல் வடிவத்திலான ஆவணங்களை அளிப்பதற்கு அனுமதிக்கப்படுதலாகாது:

ஆயின் எவ்வாறாயினும், இவ்வத்தியாயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட நடபடிகள் அல்லது விண்ணப்பங்கள் முன்விளக்கக் கலந்தாய்வு முடிவடைய முன்னர் பின்பற்றப்படுதல் வேண்டும்.

(8) எவரேனும் திறத்தவர் இப்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட இலத்திரனியல் வடிவத்திலான ஏதேனும் ஆவணத்தின் ஏல்தகவுடைமையை ஆட்சேபிக்கின்றவிடத்து, அத்தகைய திறத்தவர், விடயத்துக்கேற்ப, ஒன்றில் முன்விளக்கக் கலந்

தாய்வுக்கு முன்னர் அல்லது முன்விளக்கக் கலந்தாய்வில் மற்றெல்லாத் திறத்தவர்களுக்குமான பிரதிகளுடன் எழுத்தில் அதற்கான காரணங்களுடன் ஆட்சேபனைகளை நீதிமன்றத்தில் கோப்பிடுதல் வேண்டும்.

(9) எவரேனும் திறத்தவர் (8) ஆம் உட்பிரிவின்கீழ் ஆட்சேபனைகளைக் கோப்பிடுகின்றவிடத்து, நீதிமன்றமானது. இலத்திரனியல் வடிவத்திலான அத்தகைய ஆவணங்களை திறத்தவர்கள் ஒப்புக்கொள்ள முடியுமா என்பதனை நிச்சயிப்பதற்கு திறத்தவர்களைக் கேட்டல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒப்புதல் பதியப்படாதவிடத்து, நீதிமன்றமானது முன்விளக்கக் கலந்தாய்வில் அத்தகைய ஆவணங்களின் ஏல்தகவுடைமை தொடர்பில் பிரிவு 142ஆ இன்கீழ் தோதான முன்விளக்கக் கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"விளக்கத்திற்காக வழக்கை நிர்ணயித்தல்

80. (1) வழக்கெழு வினாக்கள் தீர்க்கப்பட்ட பின்னரும் மற்றும் முன்விளக்கக் கலந்தாய்வை நடாத்துகின்ற நீதிபதி வழக்கானது விளக்கத்திற்குத் தயாராகவுள்ளதெனத் திருப்திப்பட்டதன் பின்னரும், நீதிபதியானவர், விளக்க நீதிமன்றத்தில் விளக்கத்திற்கான தேதியொன்றை நிர்ணயிப்பதற்கு வழக்கைக் கூப்பிடுவதற்காக முன்விளக்கக் கலந்தாய்வு முடிவுற்ற தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குப் பிந்தாத தேதியொன்றை உடனடியாக நியமித்தல் வேண்டும்.

(2) விளக்கமானது, முன்விளக்கக் கலந்தாய்வை நடாத்திய நீதிபதி தவிர்ந்த, அத்தகைய நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட நீதிபதியொருவரினால் நடாத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், முன்விளக்கக் கலந்தாய்வை நடாத்துவதற்கென நீதிபதியொருவர் தனிவேறாக நியமிக்கப்பட்டிராதவிடத்து, அத்தகைய நீதிமன்றத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள நீதிபதி அத்தகைய வழக்கின் முன்விளக்கக் கலந்தாய்வு மற்றும் விளக்கம் ஆகிய இரண்டையும் நடாத்துதல் வேண்டும்.

(3) ஏதேனும் தோதான வழக்கில், வழக்கை விளக்கத்திற்காக நிர்ணயிக்கின்ற நீதிபதி, விளக்கத்திற்காக பல தேதிகளை நிர்ணயிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 80அ என்னும் பிரிவை நீக்குதல்*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 80அ இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) ஆம் உட்பிரிவில், "வழக்கு முன்விளக்கத்திற்கென முதலில் நிர்ணயிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழக்கு முன்விளக்கக் கலந்தாய்வுக்கென முதலில் நிர்ணயிக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் (2) ஆம் உட்பிரிவில், "வழக்கு முன்விளக்கத்திற்கென முதலில் நிர்ணயிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழக்கு முன்விளக்கக் கலந்தாய்வுக்கென முதலில் நிர்ணயிக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவைத் திருத்துதல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில், ''எவரேனும் திறத்தவர் கேட்புக்குமுன் எந்நேரத்திலும்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''எவரேனும் திறத்தவர், முன்விளக்கக் கலந்தாய்வுக்காக முதலில் நிர்ண யிக்கப்பட்ட தேதிக்கு முன்னரான பதினைந்து நாட்களுள்,'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவைத் திருத்துதல்

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில், ''கேட்புக்குமுன் பத்து நாட்களுக்குக் குறையாத நியாயமான ஒரு காலத்தினுள் மறுதிறத்தவரில்லாப் பிரேரணையின் மூலம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''முன்விளக்கக் கலந்தாய்வுக்காக முதலில் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னரான பதினைந்து நாட்களுக்குக் குறையாமல் மறுதிறத்தவரில்லாப் பிரேரணையின்மூலம்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவைத் திருத்துதல்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில், ''வழக்குக்கான எத்திறத்தவரும், கேட்புக்கு முன்னர் எந்நேரத்திலும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''வழக்குக்கான திறத்தவர்கள் முன்விளக்கக் கலந்தாய்வுக்காக முதலில் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னரான பதினைந்து நாட்களுள்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவைத் திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறாகத் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை, அதன் (1) ஆம் உட்பிரிவாக மீளிலக்க மிடுவதன் மூலமும்;

(2) அதன் மீளிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், ''அத் திறத்தவரினால் காண்பிக்கப்படும்படி கட்டளையிட லாம்.'' மற்றும் ''அத்தகைய முறையில் காண்பிக்கப்படும் போது' என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே ''அத்திறத்தவரினால் காண்பிக்கப்படும்படி அல்லது

பேணிக்காக்கப்படும்படி கட்டளையிடலாம்.'' மற்றும் ''அத்தகைய முறையில் காண்பிக்கப்படும்போது அல்லது பேணிக்காக்கப்படும்போது'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அதன் மீளிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(2) நீதிமன்றத்தின் முன் ஏதேனும் வழக்குநடவடிக்கையைத் தொடுப்பதற்கு உட்கருதுகின்ற திறத்தவரொருவர் அத்தகைய வழக்குநடவடிக்கையைத் தொடுக்கமுன்னர், இலத்திரனியல் வடிவத்தில் ஏதேனும் ஆவணத்தை உடைமை கொண்டுள்ளவரும் சத்தியக்கடுதாசியினால் ஆதாரப்படுத்தப்பட்ட மனு என்றவகையாக மறுதிறத்தவரில்லாது செய்யப்படும் விண்ணப்பமொன்றில் பிரதிவாதியாக்கப்பட வேண்டிய வருமான ஆளொருவரை அல்லது உருவகமொன்றை கட்டளையொன்றில் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக அத்தகைய ஆவணத்தைப் பேணிக்காக்கும்படி, வெளிவிடும்படி அல்லது காண்பிக்கும்படி தேவைப்படுத்துகின்ற அத்தகைய கட்டளைக்காக விண்ணப்பம் செய்யலாம்.

(3) நீதிமன்றமானது, (2) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல் -

(அ) எந்த ஆளுக்கெதிராக அல்லது உருவகத்துக்கெதிராக கட்டளையொன்று நாடப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது உருவகம், அடுத்துப்பின்னர் தொடுக்கப்படவேண்டிய வழக்குநடவடிக்கைக்கான திறத்தவரொருவராக இருக்கக்கூடிய சாத்தியமிருப்பின்;

(ஆ) விண்ணப்பகாரர் அடுத்துப்பின்னர் தொடுக்கப்பட வேண்டிய அத்தகைய வழக்கு நடவடிக்கைக்கான திறத்தவரொருவராகவும் இருப்பதற்குச் சாத்தியமிருப்பின்;

(இ) பேணிக்காக்கப்படுவதற்கு, வெளிவிடப்படுவதற்கு அல்லது காண்பிக்கப்படுவதற்கு நாடப்பட்ட இலத்திரனியல் வடிவத்திலான ஆவணம், பிணக்கிலுள்ள எக்கருமம் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுவதற்கு உட்கருதப்படுகின்றனவோ அக்கருமத்துக்கு இயைபானதாகவிருப்பின் மற்றும் அத்தகைய பிரதிவாதியின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருப்பின்;

(ஈ) அத்தகைய கட்டளை பெறப்பட்டதன்மேல், ஏதேனும் இலத்திரனியல் ஆவணத்தைப் பேணிக்காப்பதற்கான, வெளிவிடுவதற்கான அல்லது காண்பிப்பதற்கான கடமை, அத்தகைய ஆளுக்கெதிராக அல்லது உருவகத்துக்கெதிராக வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருப்பின், எந்த இலத்திரனியல் வடிவத்திலான ஆவணத்தின் பேணிக்காப்பை, வெளிவிடுகையை அல்லது காண்பிப்பை விண்ணப்பகாரர் நாடுகின்றாரோ அந்த இலத்திரனியல் வடிவத்திலான ஆவணத்துக்கு நீடிப்பின்;

(உ) இலத்திரனியல் வடிவத்திலான அத்தகைய ஆவணத்தின் பேணிக்காப்பு, வெளிவிடுகை அல்லது காண்பிப்பு -

(i) நியாயமானவொரு முறையில் உட்கருதப்பட்ட வழக்குநடவடிக்கைகளைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கெனவும்;

(ii) வழக்குநடவடிக்கைகளின்றி பிணக்கு தீர்க்கப்படுவதற்கு உதவுவதற்கென வும்; அல்லது

(iii) செலவு தொகைகளை மீதமாக்குவதற் கெனவும்,

விரும்பத்தக்கதாகவிருப்பின்,

அத்தகைய விண்ணப்பத்தில் இறைஞ்சிக் கேட்கப்பட்டவாறான கட்டளையொன்றை ஆக்கலாம்;

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றைப் பெறுகின்ற எவரேனுமாள் அல்லது ஏதேனும் உருவகம் அதனோடு இணங்கியொழுகுவதற்கான கடமையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இணங்கியொழு காமை ஏற்படும் பட்சத்தில் அத்தகைய ஆள் அல்லது உருவகம் நீதிமன்ற அவமதிப்புத் தவறுக்குக் குற்ற வாளியாதலும் வேண்டும்.

(5) நீதிமன்றமொன்றின் முன்னர் முடிவுறாதுள்ள ஏதேனும் வழக்குநடவடிக்கைக்கான எவரேனும் திறத்தவர், முன்விளக்கக் கலந்தாய்வுக்காக முதலில் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் நாற்பத்தைந்து நாட்களுக்குக் குறையாமல், கட்டளையொன்றில் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக, இலத்திரனியல் வடிவத்திலான இயைபான ஏதேனும் ஆவணத்தைப் பேணிக்காக்கும்படி, வெளிவிடும்படி அல்லது காண்பிக்கும்படி அத்தகைய வழக்குக்கான வேறு எவரேனும் திறத்தவரைத் தேவைப்படுத்துகின்ற அத்தகைய கட்டளை ஆக்கப்படுவதற்கான விண்ணப்ப மொன்றைச் செய்யலாம்.

(6) இப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்ப மொன்றைச் செய்கின்ற எவரேனும் திறத்தவர் -

(அ) பேணிக்காக்கப்பட வேண்டிய அல்லது வெளி விடப்பட வேண்டிய அல்லது காண்பிக்கப்பட வேண்டிய ஒவ்வொரு விடயத்தையும் அல்லது விடயங்களின் ஒவ்வொரு வகுதியையும் நியாய மான குறிப்பானதன்மையுடன் விவரித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பேணிக்காக்கும், வெளிவிடும் அல்லது காண்பிக்கும் முறையையும் அத்தகைய பேணிக் காப்பு, வெளிவிடுகை அல்லது காண்பிப்பு எவரினால் புரியப்பட வேண்டும் என்பதையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(7) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை யொன்றைப் பெறுகின்ற திறத்தவரொருவர், அதனோடு இணங்கியொழுகுவதற்கான கடமையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இணங்கி யொழுகாமை ஏற்படும் பட்சத்தில், நீதிமன்றமானது -

(அ) அத்தகைய ஆவணத்தை இலத்திரனியல் வடிவத்தில் மீட்டெடுப்பது இயன்றதாக வுள்ளவிடத்து, அதனை மீட்டெடுப்பதற்காகக் கட்டளையிட்டு செலவுதொகைகளை அளிக்க லாம்;

(ஆ) ஆவணத்தை இலத்திரனியல் வடிவத்தில் மீட்டெடுப்பது இயன்றதாகவிராதவிடத்தும் அத்தகைய ஆவணம் இழக்கப்பட்டமை காரணமாக விண்ணப்பத்தைச் செய்கின்ற திறத்தவருக்குப் பங்கம் விளைவிக்கப் பட்டுள்ளதென்றும் மற்றைய திறத்தவரினால் அத்தகைய ஆவணம் பயன்படுத்தப்படுவ தனைப் பறிக்கச்செய்கின்ற உட்கருத்துடன் இணங்கியொழுகாத திறத்தவர் செயலாற்றி யுள்ளாரென்றும் நீதிமன்றமானது அபிப் பிராயப்படுமிடத்தும்-

(i) நியாயமானதென நீதிமன்றத்தினால் கருதப்படக்கூடியவாறான ஒரு பணத் தொகையில் செலவுதொகைகளை விதிக்கலாம்; அல்லது

(ii) ஒரு வழக்காளியின் விடயத்தில் விளைவிக்கப்பட்ட பங்கம் செலவு தொகைகள் என்றவகையாகப் பரிகரிக்க முடியாததாகவிருக்குமிடத்து, குற்ற வழக்கத்தொடுப்பு இல்லாமைக்காக அவரது வழக்கைத் தள்ளுபடிசெய் விப்பதற்கும் மற்றும் ஓர் எதிராளியின் விடயத்தில், அவரது எதிர்வாதம் ஏதே னுமிருப்பின் அதனை நீக்கிவிடச்செய் விப்பதற்கும் மற்றும் அவர் தோன்றி மறுமொழியிறுக்கவில்லை என்றாற் போன்று அதே நிலைமையில் அவரை இடுவதற்கும் கட்டளையிடலாம்.

(8) இப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஒரு திறத்தவர் அல்லது ஓர் ஆள், அத்தகைய வழக்கில் அவரது சார்பிலான சான்றாக இலத்திரனியல் வடிவத்திலான அத்தகைய ஏதேனும் ஆவணம் தனது சொந்த உரித்துடன் மட்டுமே தொடர்பானது அல்லது அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகாமைக்காக அவருக்கு வேறேதேனும் போதிய காரணம் இருந்தது என அவர் நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்தினாலொழிய, அத்தகைய இலத்திரனியல் ஆவணத்தைக் காண்பிப்ப தற்கு உரித்துடையவராதலாகாது.

(9) ஏதேனும் வழக்குநடவடிக்கைக்கான திறத்தவராக விராத எவரேனுமாளின் அல்லது உருவகத்தின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இலத்திரனியல் வடிவத்திலான ஏதேனும் ஆவணத்தைப் பேணிக்காக்கும்

படி, வெளிவிடும்படி அல்லது காண்பிக்கும்படி அத்த கைய ஆளை அல்லது உருவகத்தைத் தேவைப் படுத்துகின்ற கட்டளையொன்று ஆக்கப்படுவதற்காக, முன்விளக்கக் கலந்தாய்வுக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் நாற்பத்தைந்து நாட்களுக்குக் குறையாமல், ஏதேனும் வழக்குநடவடிக்கைக்கான திறத்தவர், சத்தியக்கடுதாசியொன்றினால் ஆதாரப் படுத்தப்பட்ட ஒரு மனு என்றவகையாக மறுதிறத்த வரில்லா விண்ணப்பமொன்றைச் செய்யலாம். எந்த ஆளுக்கெதிராக அல்லது உருவகத்துக்கெதிராக அத்தகைய கட்டளை நாடப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது உருவகம் அத்தகைய விண்ணப்பத்தில் பிரதி வாதியாக மட்டுமே ஆக்கப்படுதல் வேண்டும்.

(10) ஒன்பதாம் உட்பிரின்கீழான விண்ணப்பமொன் றைப் பெற்றதன்மேல், நீதிமன்றமானது -

(அ) இலத்திரனியல் வடிவத்திலான எந்த ஆவணம் பேணிக்காக்கப்படுவதற்கு, வெளிவிடப்படு வதற்கு அல்லது காண்பிக்கப்படுவதற்கு நாடப் படுகின்றதோ அந்த ஆவணம் விண்ணப்ப காரரின் வழக்கை ஆதாரப்படுத்தும் அல்லது அத்தகைய வழக்குநடவடிக்கைக்கான எவ ரேனும் திறத்தவரின் வழக்கைப் பாதகமான முறையில் பாதிக்கும் சாத்தியங்கொண்டதாக விருப்பின்;

(ஆ) நியாயமானமுறையில் உரிமைக் கோரிக்கையை எண்பிக்காதிருப்பதற்கென அல்லது செலவு தொகைகளைச் சேமிப்பதற்கென பேணிக்காப்பு, வெளிவிடுகை அல்லது காண்பிப்பு அவசிய மாகவிருப்பின்,

அத்தகைய விண்ணப்பத்தில் இறைஞ்சிக் கேட்கப்பட்டவாறு கட்டளையொன்றை ஆக்கலாம்.

(11) பத்தாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று–

(அ) இலத்திரனியல் வடிவத்திலான எந்த ஆவணங்களைப் பேணிக்காப்பதற்கு, வெளிவிடுவதற்கு அல்லது காண்பிப்பதற்குப் பிரதிவாதி தேவைப்படுத்தப்படுகின்றாரோ அந்த இலத்திரனியல் வடிவத்திலான ஆவணங்களைக் குறித்துரைக்கலாம்;

(ஆ) இயைபானதாயின், பேணிக்காப்பு, வெளிவிடுகை அல்லது காண்பிப்பு இடம்பெறவேண்டிய நேரத்தையும் இடத்தையும் குறித்துரைக்கலாம்;

(இ) இலத்திரனியல் வடிவத்திலான ஆவணம் எந்தப் படிவத்தில் அல்லது படிவங்களில் காண்பிக்கப்படவேண்டுமோ அந்தப்படிவத்தை அல்லது படிவங்களைக் குறித்துரைக்கலாம்; அத்துடன்

(ஈ) பேணிக்காப்பை அல்லது வெளிவிடுகையைச் செய்யும்போது, பிரதிவாதியின் கட்டுப்பாட்டில் அல்லது உடைமையில் உள்ள அல்லது இல்லாத ஆவணங்கள் எவையேனுமிருப்பின், அவற்றை அதற்கான காரணங்களுடன் குறித்துரைக்கும்படி அவரைத் தேவைப்படுத்தலாம்.

(12) பத்தாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் அல்லது உருவகம் நீதிமன்ற அமதிப்புத் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(13) எந்த ஆளிடமிருந்து, உருவகத்திடமிருந்து அல்லது திறத்தவரிடமிருந்து ஆவணமொன்றின் பேணிக்காப்பு, வெளிவிடுகை அல்லது காண்பிப்பு, (2), (5) அல்லது

(9) ஆம் உட்பிரிவின்கீழ் நாடப்படுகின்றதோ அந்த ஆள், உருவகம் அல்லது திறத்தவர் செலவுச்சுமை காரணமாக நியாயமானமுறையில் அணுகத்தக்கதாக இராதமைக்காக அத்தகைய ஆவணத்தின் மூலத்திலிருந்து அத்தகைய பேணிக்காப்புக்கு, வெளிவிடுகைக்கு அல்லது காண்பிப்புக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்குமிடத்து, நீதிமன்றமானது, சொல்லப்பட்ட உட்பிரிவுகளின்கீழ் வேறுவகையாக அனுமதிக்கப்பட்ட அத்தகைய பேணிக்காப்பின், வெளிவிடுகையின் அல்லது காண்பிப்பின் அளவை பின்வருமிடத்து வரையறுக்கலாம்:-

(அ) நாடப்பட்ட பேணிக்காப்பு, வெளிவிடுகை அல்லது காண்பிப்பு வழக்கின் முக்கிய நிகழ்வுகளுக்கு நியாயமற்றமுறையில் ஒன்றுதிரண்டதாக, இரட்டிப்பானதாக, விகிதசாரப்படியற்றதாக அல்லது விஞ்சுதலாக உள்ளவிடத்து;

(ஆ) இலத்திரனியல் வடிவத்திலான கோரப்பட்ட ஆவணத்தை, கூடுதல் வசதியாகவுள்ள, குறைவான சுமைகொண்ட அல்லது குறைந்த செலவிலான வேறேதேனும் மூலத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமானவிடத்து;

(இ) பேணிக்காப்பை, வெளிவிடுகையை அல்லது காண்பிப்பை நாடுகின்ற திறத்தவர், வழக்கிலான கண்டுபிடிப்பின்மூலம் அத்தகைய ஆவணத்தைப் பெற்றுக்கொள்வதற்குப் போதிய வாய்ப்பை உடையவராக இருந்துள்ளவிடத்து; அல்லது

(ஈ) இலத்திரனியல் வடிவத்திலான கோரப்பட்ட ஆவணம் பிணக்கிலுள்ள வழக்கெழுவினாக்களுக்கு இயைபற்றதாக அல்லது விகிதாசாரப்படியற்றதாக உள்ளவிடத்து அல்லது திறத்தவரின் வளங்கள் அல்லது உத்தேசிக்கப்பட்ட

கண்டுபிடிப்பின் செலவுச்சுமை, அவ்வழக்கெழுவினாக்களைத் தீர்த்துவைப்பதில் நிகழ்தகு நன்மைகளுக்கும் முக்கியத்துவத்துக்கும் மேலதிகமாகவுள்ளவிடத்து:

ஆயின், எவ்வாறாயினும், பேணிக்காப்பு, வெளிவிடுகை அல்லது காண்பிப்புக்கான விண்ணப்பத்தைச் செய்கின்ற திறத்தவர், நீதிமன்றத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கமைய, நற்காரணத்தைக் காண்பிப்பதற்கு இயன்றவராகவிருப்பின், இலத்திரனியல் வடிவத்திலான அத்தகைய ஆவணத்தின் மூலங்களிலிருந்தான பேணிக்காப்பை, வெளிவிடுகையை அல்லது காண்பிப்பை நீதிமன்றமானது கட்டளையிடலாம்.

(14) வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய அல்லது கட்டளையிடப்பட்டாலொழிய, இலத்திரனியல் வடிவத்திலான வெளிவிடப்பட்ட ஆவணங்களின் இலத்திரனியற் பிரதிகள்–

(அ) அவற்றின் சுதேச படிவத்திலும்;

(ஆ) அத்தகைய ஒவ்வோர் ஆவணத்தினதும் உருவாக்கத்தேதி தொடர்பான மேனிலைத் தரவுகளைப் பேணிக்காக்கும் ஒரு முறையிலும்; அத்துடன்

(இ) கோரப்பட்டவாறாக அத்தகைய ஆவணங்களின் வகுதிகளுக்கு நேரொத்ததாகவுள்ள ஒரு முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டும் சுட்டுத் துண்டிடப்பட்டும்,

காண்பிக்கப்படுதல் வேண்டும்.”; அத்துடன்

(4) அதன் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும்:-

"ஆவணங்களின் அல்லது இலத்திரனியல் வடிவத்திலான ஆவணங்களின் பேணிக்காப்புக்கான, வெளிவிடுகைக்கான அல்லது காண்பிப்புக்கான கட்டளைகள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவைத் திருத்ததுதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் "ஒரு வழக்குக்கான திறத்தவர், அதன் கேட்புக்குமுன்னர் எந்நேரத்திலும் அல்லது அதன் கேட்பின்போது," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு வழக்குக்கான திறத்தவர், அதன் முன்விளக்கக் கலந்தாய்வுக்காக முதலில் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு பதினைந்து நாட்களுக்கு முன்னர்," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 104அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 104அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"பாதுகாப்புசார் கட்டளைகள்

104அ. ஓர் ஆவணத்தின் அல்லது இலத்திரனியல் வடிவத்திலான ஆவணத்தின் கண்டுபிடிப்பு, காண்பிப்பு அல்லது பேணிக்காப்பு எந்தத் திறத்தவர், ஆள் அல்லது உருவகத்துக்கு எதிராக நாடப்படுகின்றதோ அந்தத் திறத்தவர், ஆள் அல்லது உருவகம், அத்தகைய வழக்கு எந்த நீதிமன்றத்தினுள் முடிவுறாதுள்ளதோ அந்த நீதிமன்றத்துக்குப் பாதுகாப்புசார் கட்டளையொன்றுக்காக விண்ணப்பிக்கலாம். நீதிமன்றமானது, நற்காரணத்துக்காக,

அத்தகைய ஏதேனும் ஆவணத்தை அல்லது ஓர் ஆளின், உருவகத்தின் அல்லது திறத்தவரின் நலன்களைப் பாதுகாப்பதற்குப் பின்வரும் கட்டளைகளுள் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை ஆக்கலாம்:-

(அ) வெளிவிடுகையை அல்லது கண்டுபிடிப்பைத் தடைசெய்தும்;

(ஆ) வெளிவிடுகையின் அல்லது கண்டுபிடிப்பின் நேரம், இடம், மாதிரிகளும் முறையும் என்பவனவுட்பட, நியதிகளைக் குறித்துரைத்தும்;

(இ) கண்டுபிடிப்பை நாடுகின்ற திறத்தவரினால் தெரிவுசெய்யப்பட்ட ஒன்றைத் தவிர்ந்த வேறு ஒரு கண்டுபிடிப்பு முறையை விதித்துரைத்தும்;

(ஈ) குறித்தசில கருமங்கள் பற்றிய விசாரணையைத் தடைசெய்தும் அல்லது வெளிவிடுகைகளின் அல்லது கண்டுபிடிப்புக்களின் நோக்கெல்லையை வரையறுத்தும்;

(உ) கண்டுபிடிப்பு நடாத்தப்படுகையில் சமுகமாயிருக்கக்கூடிய ஆட்களை அல்லது நிபுணர்களைப் பெயர் குறித்தும்;

(ஊ) வெளிவிடுகையை, கண்டுபிடிப்பை, பேணிக்காப்பை, சோதனைகளை நடாத்தவேண்டிய, அத்துடன் அவற்றைக் கட்டுக்காப்பில் வைத்திருந்து, பரிசோதனையும் பகுப்பாய்வும்

செய்து, அவற்றை நீதிமன்றத்துக்கு அறிக்கையிட்டு முன்வைக்கவேண்டிய ஆட்களை அல்லது நிபுணர்களை நியமித்தும்;

(எ) ஓர் அந்தரங்கமான ஆராய்ச்சி, அபி விருத்தி அல்லது வியாபார இரகசியம் அல்லது வர்த்தகத் தன்மையினதான வெளிவிடப்படாத அல்லது அந்தரங்க மான தகவல் வெளிவிடப்படுத லாகாது அல்லது குறித்துரைக்கப்பட்ட வொரு முறையில் மட்டுமே வெளி விடப்பட வேண்டுமெனப் பணித்தும்; அல்லது

(ஏ) வெளிவிடப்படாத அந்தரங்கமான ஆராய்ச்சி, அபிவிருத்தி அல்லது வியாபார இரகசியம் தொடர்பான ஆவணமொன்று அல்லது வர்த்தகத் தன்மையினதான வெளிவிடப்படாத அல்லது அந்தரங்கமான தகவல் வெளிவிடப்படுதலாகாது அல்லது குறித்துரைக்கப்பட்டவொரு முறையில் மட்டுமே வெளிவிடப்படவேண்டு மெனப் பணித்தும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 109 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***16.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 109 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "வினாக்கொத்துக்களுக்கு மறுமொழியளித்தல், அல்லது கண்டுபிடித்தல், காண்பித்தல் அல்லது பார்வையிடல்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''வினாக்கொத்துக்களுக்கு மறுமொழியளித்தல் அல்லது கண்டுபிடித்தல், காண்பித்தல், பார்வையிடல், பேணிக்காத்தல் அல்லது பாதுகாத்தல்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

***17.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"ஆவணங்கள் பற்றிய ஏற்பாடுகள், வேறு முக்கியமான பெருட்களுக்கும் இலத்திரனியல் வடிவத்திலான ஆவணங் களுக்கும் ஏற்புடையன வாதல்

117. ஆவணங்கள் பற்றிய இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, சான்றாகக் காண்பிக்கப்படத்தக்க வேறு எல்லா முக்கியமான பொருட்களுக்கும் இலத்திரனியல் வடிவத்திலான எல்லா ஆவணங்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 121 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***18.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 121 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XVIIஅ வை மாற்றீடு செய்தல்*

***19.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XVIIஅ (பிரிவுகள் 142அ, 142ஆ, 142இ, 142ஈ, 142உ, 142ஊ, 142எ, 142ஏ மற்றும் 142ஐ) இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அத்தியாயம் இடப்படுகின்றது:-

"அத்தியாயம் XVIIஅ

**முன்விளக்கக் கலந்தாய்வும் முன்விளக்கக் கட்டளைகளும்**

முன்விளக்கக் கலந்தாய்வு

142அ. (1) நீதிமன்றமானது, பின்வரும் நோக்கங்களுக்காக, திறத்தவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற சட்டத்தரணிகளுடன் மற்றும் அவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்படாத திறத்தவர்களுடன் முன்விளக்கக் கலந்தாய்வொன்றை நடாத்துதல் வேண்டும்:-

(அ) அவ்வாறு தீர்த்துவைக்கப்படாத கருமங்கள் மட்டுமே விளக்கத்துக்காக நிர்ணயிக்கப்படுதல் வேண்டுமென்பதனை உறுதிப்படுத்தி, (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான திறத்தவர்களுக்கிடையே தீர்ப்பொன்றை வசதிப்படுத்துவதற்கும்;

(ஆ) நீதிமுறை வழக்கு முகாமைத்துவத்தினூடாக வழக்கைக் கேட்டுத்தீர்மானிப்பதனை துரிதப்படுத்துவதற்கும்;

(இ) விளக்க முகாமைத்துவமின்மை காரணமாக வழக்கானது நீட்டிக்கப்படாதிருக்கும் வகையில் முன்னாயத்தத்தினூடாகவும் மற்றும் வழக்கு முகாமைத்துவக் கட்டளைகளினூடாகவும் விளக்கத்தின் தரத்தைச் சீராக்குவதற்கும்;

(ஈ) அவசியமற்ற முன்விளக்க விண்ணப்பங்களை ஊக்கமிழக்கச் செய்வதற்கென, முக்கிய வழக்கெழுவினாக்களை முற்கூட்டியவொரு கட்டத்தில் அடையாளங்காண்பதற்கும்;

(உ) சான்று கண்டுபிடிக்கப்படுவதனை வசதிப்படுத்துவதற்கும்;

(ஊ) சாட்சிகளையும் ஆவணங்களையும் அடையாளங்காண்பதற்கும் விளக்கத்தில் அவசியமற்ற சான்று காண்பிக்கப்படுவதனைத் தவிர்ப்பதற்கும்; அத்துடன்

(எ) முன்விளக்கக் கட்டளைகளுக்காகவும் அவற்றின் வலுவுறுத்துகைக்காகவும் கண்டிப்பான கால எல்லைகளை நிர்ணயிப்பதற்கும்.

(2) (அ) நீதிபதியானவர், முன்விளக்கக் கலந்தாய்வில், பிணக்கைத் தீர்த்துவைக்கும்படி திறத்தவர்களை வற்புறுத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்தல் வேண்டுமென்பதுடன் திறத்தவர்கள் தீர்ப்புக்கு உடன்படுமிடத்து, அத்தகைய தீர்ப்பு பதியப்பட்டு திறத்தவர்களினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய தீர்ப்பின் நியதிகளுக்கிணங்கக் கட்டளையொன்று ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) தோதான வழக்கொன்றில் நீதிபதியானவர், ஒரு தீர்ப்பை, சீர்ப்படுத்தலை, இணக்கத்தை அல்லது வேறு உடன்பாடுகளை வசதிப்படுத்துவதற்கென முன்விளக்கக் கலந்தாய்வில் சமுகமளிக்கும்படி ஒன்றில் நேரடியாக அல்லது ஒரு சட்ட ஆளாகவுள்ள திறத்தவரொருவரின் விடயத்தில், ஓர் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியினூடாகத் தோன்றும்படி திறத்தவர்களைப் பணிக்கலாம்.

(3) முன்விளக்கக் கலந்தாய்வில் நீதிபதியானவர், தீர்க்கப்படாத நியாயாதிக்கஞ்சார் மற்றும் சட்டப் பிரச்சனைகளைத் தீர்மானிக்கலாம்.

முன்விளக்கக் கட்டளைகள்

142ஆ. பிரிவு 104அ வின் ஏற்பாடுகளுக்கமைய, நீதிபதியானவர், முன்விளக்கக் கலந்தாய்வில் திறத்தவர்களுடன் கலந்துரையாடி பின்வரும் கருமங்களின்மீது தோதான முன்விளக்கக் கட்டளைகளை ஆக்குதல் வேண்டும்:-

(அ) நிகழ்வுகளின் அல்லது ஆவணங்களின் ஒப்புதல்களை அடையாளங் கண்டு பெற்றுக்கொள்ளுதலும்;

(ஆ) வழக்கிற்கான இயைபான தன்மை மற்றும் ஏல்தகவுடைமையின் அடிப்படையில் விளக்கத்தில் கட்டளைவிட்டழைக்கப்பட வேண்டிய சாட்சிகளின் எண்ணிக்கையை அடையாளங்காணுதலும் அவசியமற்ற சாட்சிகளைக் கட்டளைவிட்டழைப்பதனைத் தவிர்த்தலும்;

(இ) வழக்கிற்கான இயைபான தன்மை, ஏல்தகவுடைமை மற்றும் ஆவணங்களின் மெய்யான தன்மை என்பவற்றின் அடிப்படையில் விளக்கத்தில் காண்பிக்கப்படிவேண்டிய ஆவணங்களை அடையாளங்காணுதலும் தோதான சந்தர்ப்பங்களில் அத்தகைய ஆவணங்களின் எண்பிப்பைத் தேவைப்படுத்தாதுவிடுதலும்;

(ஈ) ஆவணங்களும் உருவப்பொருட்களும் கண்டுபிக்கப்படவேண்டிய, பாதுகாக்கப்படவேண்டிய பேணிக்காக்கப்பட வேண்டிய மற்றும் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படவேண்டிய நியதிகள், நேரம், இடம், முறை மற்றும் படிவம் என்பவற்றைக் குறித்துரைத்தல் உட்பட அத்தகைய ஆவணங்களையும் உருவப் பொருட்களையும் கண்டுபிடித்தலும், சோதனையிடுதலும், பாதுகாத்தலும், பேணிக்காத்தலும், காண்பித்தலும் ஆவணங்களையும் கையொப்பங்களையும் மெய்யென்று உறுதிப்படுத்தலும் தொடர்பாகவும்;

(உ) சிறப்புரிமைகளுக்கும் வரையறைகளுக்கும் அமைந்த வியாபார இரகசியங்கள், வேறு அந்தரங்க ஆராய்ச்சித் தகவல்கள் மற்றும் வெளிவிடப்படாத வர்த்தகத் தகவல்கள் என்பவற்றைப் பாதுகாத்தலும்;

(ஊ) ஏதேனும் பகிரங்க அலுவலகம், பகிரங்கக் கூட்டுத்தாபனம், மாகாண சபை, உள்ளூர் அதிகாரசபை, வங்கி, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழு, பங்காண்மை, வைத்தியசாலை, மருத்துவ நிறுவகம், நீதிமன்றம், நியாயசபை அல்லது அத்தகைய ஏதேனும் ஒத்த நிறுவனத்தின் கட்டுக்காப்பிலுள்ள ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதலும்:

ஆயின், இப்பந்தியின் ஏற்பாடுகள், ஏதேனும் ஆவணமானது எந்த விடயம் தொடர்பானதோ அந்த விடயம் அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டதோ அந்த அமைச்சரின் அபிப்பிராயத்தில் அத்தகைய வெளிவிடுகையின் மூலம் பொதுமக்களின் நலன் பாதிக்கப்படுமென்ற ஏதுவின் மீது அந்த ஆவணத்தை பிடித்துவைத்திருப்பதற்கு அரசுக்குள்ள உரிமையைப் பங்கப்படுத்துதலாகாது;

(எ) திறத்தவர்களின் உடன்பாட்டின்மேல், நிகழ்வுபற்றிய ஏதேனும் கேள்வியை விசாரணை செய்து அதன் மீது

அறிக்கையிடுவதற்கும் அதுதொடர்பிலான அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்கும், தனியான, கூட்டான அல்லது நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட தனிப்பட்ட நிபுணர்களுக்கு ஆணைகளை வழங்குதலும்:

ஆயின், அத்தியாயம் XXIX இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறான உள்நாட்டுப் புலனாய்வுக்கான ஆணையொன்றை வழங்குவதற்கான ஏதேனும் விண்ணப்பம், முன்விளக்கக் கலந்தாய்வுக்காக முதலில் நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன்னராகச் செய்யப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும், நீதிமன்றம், அதன் தற்றுணிபின்படி, திறத்தவர்களுக்கிடையே பிணக்கிலுள்ள கருமங்களைத் தீர்மானிப்பதற்காக அல்லது பிணக்கைத் தீர்த்துவைப்பதற்காக ஆணையொன்று அவசியமாகவுள்ளதெனப் பதியப்படவேண்டிய காரணங்களுக்காகவும் செலவு தொகைகள் பற்றிய அல்லது வேறு வகையான நியதிகளுக்கமையவும் அது திருப்திப்படின், முன்விளக்கக் கலந்தாய்வுக்காக முதலில் நிர்ணயிக்கப்பட்ட நாளுக்குப்பின்னர் அத்தகைய உள்நாட்டுப் புலனாய்வுக்காக ஆணையொன்றை வழங்கலாம்;

(ஏ) நிகழ்வுகள் அல்லது சட்டம்பற்றிய எவையேனும் வழக்கெழுவினாக்கள், ஏதேனும் நிகழ்வின் அல்லது ஆவணத்தின் எண்பிப்புப் பற்றிய முறை

அல்லது விளக்கத்துக்குக் கட்டளை விட்டழைக்கப்படவேண்டிய சாட்சிகளின் எண்ணிக்கை அல்லது காண்பிக்கப்படவேண்டிய ஆவணங்களின் எண்ணிக்கை என்பனவுட்பட, ஏதேனும் கருமம் தொடர்பாகத் திறத்தவர்களின் ஏதேனும் உடன்பாட்டைப் பதிதலும் மற்றும் திறத்தவர்களின் அத்தகைய உடன்பாட்டிற்கிணங்கக் கட்டளைகளை அல்லது தீர்ப்பைப் பதிதலும்:

ஆயின், நீதிமன்றமானது, அத்தகைய உடன்பாட்டின் பயனைத் திறத்தவர்களுக்கு வாசித்துக்காட்டி விளக்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உடன்பாட்டின் உள்ளீடுகளையும் அவற்றின் பயனையும் திறத்தவர்கள் விளங்கிக்கொள்கின்றனரென்ற நிகழ்வைப் பதிதலும் வேண்டும்; அத்துடன் திறத்தவர்கள், அத்தகைய உடன்பாடு திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழிமூலமாகப் பதியப்படுமிடத்து, உடன்பாட்டை அல்லது வழக்கேட்டைக் கையொப்பமிடுதல் வேண்டும்;

(ஐ) பிரிவு 149அ வின் ஏற்பாடுகளுக்கமைய, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வழக்குகளை ஒன்று திரட்டுதலும்;

(ஒ) வழக்குகளை மீளப்பெறுதலும்;

(ஓ) விளக்கத்தில் தொழினுட்பவியலைப் பயன்படுத்துதல் அல்லது ஒரு விசேட உரைபெயர்ப்பாளரை ஈடுபடுத்துதல்;

(ஔ) விளக்கத்தேதிகளின் எண்ணிக்கையை அல்லது விளக்கமொன்று எக்காலப்பகுதியினுள் முடிவுறுத்தப்படக்கூடுமோ அக்காலப் பகுதியை மற்றும் விளக்கத்துக்காகக் கிடைக்கக்கூடிய நேரம் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பவற்றை அடையாளங் காணுதலும்; அல்லது

(க) வழக்கை நீதியாகவும் துரிதமாகவும் கேட்டுத்தீர்மானிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது விரும்பத்தக்கக்கூடியவாறான வேறேதேனும் நடவடிக்கையை எடுத்தலும்.

*திறத்தவர்கள் மூல ஆவணங்களைத் தயாராக வைத்திருத்தல்*

142இ. திறத்தவர்கள் அல்லது அவர்களின் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித்தத்துவக்காரர்கள், முன்விளக்கக் கலந்தாய்வில், ஆவணங்கள் பற்றிய நிரலில் குறித்துரைக்கபட்டவையும் 79 ஆ என்னும் பிரிவின்கீழ் நீதிமன்றப் பதிவகத்துக்கு அளிக்கபட்டவையுமான எல்லா மூல ஆவணங்களையும் அல்லது அவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை முன்விளக்கக் கலந்தாய்வுக்குக் கொண்டு வருதலும் தயாராக வைத்திருத்தலும் வேண்டும்.

*முன்விளக்கக் கலந்தாய்வில் அடையாளங் காணப்பட்ட அல்லது கண்டு பிடிக்கப்பட்ட மேலதிகச் சாட்சிகளை அழைப்பதற்கும் மேலதிக ஆவணங்களைக் காண்பிப்ப தற்கும் நீதிமன்ற அனுமதி*

142ஈ. (1) நீதிமன்றமானது, முன்விளக்கக் கலந்தாய்வில், எவரேனும் திறத்தவரின் விண்ணப்பத்தின்மீது, எவரேனும் சாட்சி பிணக்கிலுள்ள கருமங்களுக்கு இயைபாகவுள்ளார் அல்லது ஏதேனும் ஆவணம் பிணக்கிலுள்ள கருமங்களுக்கு இயைபாகவுள்ளது என அத்தகைய கலந்தாய்வில் அடையாளங்காணப்படின் 79ஆ என்னும் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் கோப்பிடப்பட்ட சாட்சிகள் அல்லது ஆவணங்கள் பற்றிய நிரலில் அத்தகைய சாட்சி அல்லது ஆவணம் சேர்க்கப்பட்டிராதமை எவ்வாறிருப்பினும், அத்தகைய சாட்சியை அழைப்பதற்கு அல்லது

அத்தகைய ஆவணத்தைக் காண்பிப்பதற்கு அத்தகைய திறத்தவருக்கு அனுமதியளித்தல் வேண்டும்:

ஆயின், முன்விளக்க நீதிபதி, 79ஆ என்னும் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் கோப்பிடப்பட்ட நிரலில் சேர்க்கப்பட்டிராத ஆவணங்களை அளிப்பதற்கு அல்லது சாட்சிகளைக் கட்டளை விட்டழைப்பதற்கு நாடுகின்ற திறத்தவருக்கெதிராக, சொல்லப்பட்ட நிரலில் அத்தகைய ஆவணங்களை அல்லது சாட்சிகளைச் சேர்ப்பதற்குத் தவறியமைக்கான போதிய காரணங்களை அத்தகைய திறத்தவர் சமர்ப்பிக்கமுடியுமானவராக இருந்தாலொழிய, செலவுதொகைகளை விதிக்கலாம்.

(2) நீதிமன்றம், அதன் தற்றுணிபின்படி, ஏதேனும் ஆவணம் அத்தியாயம் XVI இன்கீழ் கண்டுபிடிக்கப்பட்டு பிணக்கிலுள்ள கருமங்களுக்கு இயைபானதாகவிருப்பின், விளக்கத்தில் அத்தகைய ஆவணத்தைக் காண்பிக்கும்படியும் அதற்கு எண்பிப்பாக எவரேனும் சாட்சியை அழைக்கும்படியும் எவரேனும் திறத்தவருக்கு முன்விளக்கக் கலந்தாய்வில் அனுமதியளிக்கலாம்.

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றமானது எவரேனும் மேலதிகச் சாட்சியை அழைப்பதற்கு அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பிப்பதற்கு அனுமதியளிக்குமிடத்து, நீதிமன்றமானது, முன்விளக்கக் கலந்தாய்வில், அத்தகைய திறத்தவர் விளக்கத்தில் அத்தகைய சாட்சியை அழைப்பதற்கு அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பிப்பதற்கு உரித்துடையவராகவுள்ளார் என்ற நிகழ்வைப் பதிதல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் சாட்சிகள் அல்லது ஆவணங்கள்பற்றிய மேலதிக நிரலெதுவும் நிரப்பப்படுவது தேவையாகவிராது.

விளக்கத் தேதியை நிர்ணயித்த பின்னர் முன்விளக்க நடவடிக்கைகள் அனுமதிக்கப் படலாகாது

142உ. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, முன்விளக்க நடவடிக்கைகளுக்கான ஏதேனும் விண்ணப்பம், அத்தகைய நடவடிக்கைகளை அனுமதிக்காவிடின் மற்றும் அத்தகைய நடவடிக்கைகளுக்காக விண்ணப்பிக்கின்ற திறத்தவர் குற்றவாளியல்லராயின் பாரதூரமானதும் பரிகரிக்க முடியாததுமான அநீதி விளைவிக்கப்படுமென்று பதியப்படவேண்டிய காரணங்களுக்காகவும் செலவுதொகைகளுக்கமையவும் நீதிமன்றம் திருப்திப்பட்டாலொழிய, ஒரு வழக்கின் முன்விளக்கக் கலந்தாய்வு முடிவுற்றபின்னர் அனுமதிக்கப்படுதலாகாது.

வழக்கெழு வினாக்களைத் தீர்மானித்தல்

142ஊ.(1) எல்லா முன்விளக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளனவென நீதிபதி திருப்திப்படுமிடத்து, நீதிபதியானவர், முன்விளக்கக் கலந்தாய்வின்போது நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட திறத்தவர்களின் வழக்குரைகள், உத்தேசிக்கப்பட்ட ஒப்புதல்கள் மற்றும் வழக்கெழுவினாக்கள், வினாக்கொத்துக்கள், ஆவணங்கள், திறத்தவர்களின் உடன்பாடுகள் மற்றும் அறிக்கைகள், எவையேனுமிருப்பின் அவை, என்பவற்றைக் கவனத்துட்கொண்டு வழக்கெழுவினாக்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) ஒரே வழக்கில் சட்டம் மற்றும் நிகழ்வு ஆகிய இரண்டும் பற்றிய வழக்கெழுவினாக்கள் எழுமிடத்தும், சட்டம் பற்றிய வழக்கெழுவினாக்களின்மீது மட்டுமே வழக்கானது கேட்டுத் தீர்மானிக்கப்படலாமென நீதிமன்றம் அபிப்பிராயப்படுமிடத்தும், நீதிமன்றமானது அத்தகைய வழக்கெழுவினாக்களை முதலில் விளங்குதல் வேண்டுமென்பதுடன் அந்நோக்கத்துக்காக நீதிமன்றம், தகுதியானதென அது கருதினால், சட்டம்பற்றிய வழக்கெழுவினாக்கள் தீர்மானிக்கப்பட்ட பின்னர் வரை நிகழ்வுபற்றிய வழக்கெழுவினாக்களின் தீர்த்துவைத்தலைப் பின்போடலாம்.

*முன் விளக்கத்தை முன்போடுதல் அல்லது பின்போடுதல்*

142எ. முன்விளக்கக் கலந்தாய்வை நடாத்துகின்ற நீதிபதி, ஒன்றில் அவரது சொந்தப் பிரேரணையின் மீதும் அல்லது எவரேனும் திறத்தவரின் விண்ணப்பத்தின்மீதும் காண்பிக்கப்பட்ட போதிய காரணத்துக்காகவும், முன்விளக்கக் கலந்தாய்வுக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியை முன்போடலாம் அல்லது பின்போடலாம்:

ஆயின், முன்விளக்கக் கலந்தாய்வை நடாத்துகின்ற நீதிபதி, அத்தகைய கலந்தாய்வு தொடங்கியதிலிருந்து நான்கு மாதங்களினுள், சான்றைச் சமர்ப்பிப்பதிலான அல்லது கண்டுபிடிப்புக்களிலான தாமதங்களுக்குட்பட, பதியப்படவேண்டிய காரணங்களுக்காக அதற்கிணங்கச் செயலாற்றுவதிலிருந்து நீதிபதி தடுக்கப்பட்டாலொழிய, கேட்பை முடிவுறுத்துதல் வேண்டும்.

*திறத்தவர்களின் தவறுகை*

142ஏ. எவரேனும் திறத்தவர் -

(அ) அத்தியாயம் Xஆ வின் மற்றும் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க விழிப்புக்கவனத்துடன் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அல்லது முன்விளக்கக் கலந்தாய்வின் போது வழக்கை விழிப்புக்கவனத்துடன் தொடுப்பதற்கு அல்லது எதிர்வாதிடுவதற்குத் தவறுமிடத்து அல்லது ஏதேனும் நியாயமான ஏதுவின்றி ஏதேனும் முன்விளக்கக் கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து; அல்லது

(ஆ) முன்விளக்கக் கலந்தாய்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட நாளன்று அல்லது அது எந்த வேறேதேனும் நாளுக்கு ஒத்தி

வைக்கப்படுகின்றதோ அந்த வேறே தேனும் நாளன்று போதிய காரண மின்றித் தோன்றத் தவறுமிடத்து,

முன்விளக்கக் கலந்தாய்வை நடாத்துகின்ற நீதிபதி, தோதான எல்லாச் சூழ்நிலைகளையும் கவனத்துட்கொண்டு,-

(i) செலவுதொகைகளின் கொடுப்ப னவுக்கு அல்லது செலவுதொகை களின் முற்கொடுப்பனவுக்கு அமைய, இணங்கியொழுகப்பட்டிராத தேவைப் பாட்டுக்கு இணங்கியொழுகும்படி அத்தகைய திறத்தவரைப் பணிக் கின்றதும், தகுதியானதென அவர் கருதக்கூடியவாறானதுமான அத்த கைய தோதான கட்டளையை, அத்த கைய இணங்கியொழுகாமை கணிச மானளவில் நியாயப்படுத்தப்பட்டி ருந்தாலொழிய, ஆக்கலாம்;

(ii) ஏதேனும் முன்விளக்கக் கட்டளையைப் பெற்றுக்கொண்ட எவரேனும் திறத்த வரினால் அத்தகைய ஏதேனும் முன்விளக்கக் கட்டளையைப் புறக் கணித்து அத்தகைய தவறுகை புரியப் பட்டமை எவ்வாறிருப்பினும், மற்றும் அத்தகைய தவறுகைபுரியும் திறத் தவருக்கெதிராகச் செலவுதொகைகள் விதிக்கப்படுதல் பற்றிய அத்தகைய நியதிகளின் மேலும் மேலதிக வழக்கு நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடாத் தலாம்; அல்லது

(iii) அத்தியாயம் XII இல் குறித்துரைக் கப்பட்ட முறைகளுள் ஒன்றில் வழக்கைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க லாம்:

ஆயின், திறத்தவரொருவர் முன் விளக்கக் கலந்தாய்வில் வருகை தராதிருந்து பிரதிநிதித்துவப் படுத்தப்படாது இருந்தாலொழிய, (iii) ஆம் பந்தியின்கீழான கட்டளை யொன்று ஆக்கப்படமுன்னர், பந்தி (i) அல்லது (ii) இன் நியதிகளின் படியான கட்டளைகளை ஆக்குவதற்கு நீதிபதி எல்லா முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 175 ஆம் பிரிவைத் திருத்துதல்

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 175 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "நூற்றிருபத்தோராம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "79ஆ என்னும் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அல்லது 142ஈ என்னும் பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டவாறாக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "நூற்றிருபத்தோராம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக திறத்தவ ரொருவரால் நீதிமன்றத்திற் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங் களின் நிரலில் உள்ளடக்கப்பட வேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்டிருந்தும், அவ்வாறு உள்ளடக்கப்படாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "79ஆ என்னும் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக திறத்தவரொருவரால் நீதிமன்றத்திற் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் நிரலில் உள்ளடக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்டிருந்தும், அவ்வாறு உள்ளடக்கப்படாத அல்லது 142ஈ என்னும் பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால் அனுமதிக் கப்படாத" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(3) இப்பிரிவின்கீழான கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து, நீதிமன்றமானது 142ஆ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.".

நிலை பெயர்கால ஏற்பாடுகள்

**21.** (இப்பிரிவில் "நீக்கப்பட்ட ஏற்பாடுகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் Xஅ (பிரிவு 79அ), அத்தியாயம் XVII அ (பிரிவுகள் 142அ, 142ஆ, 142இ, 142ஈ, 142உ, 142ஊ, 142எ, 142ஏ, மற்றும் 142ஐ) மற்றும் பிரிவு 80அ என்பன, அவைதொடர்பில் -

(அ) முன்விளக்கக் கேட்புக்கான தேதியொன்று ஏலவே நிர்ணயிக்கப்பட்டுள்ள; அல்லது

(ஆ) நீக்கப்பட்ட அத்தியாயம் XVIIஅ இன்கீழ் ஏதேனும் முன்விளக்க நடவடிக்கை ஏலவே எடுக்கப்பட்டுள்ள,

மாவட்ட நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லா வழக்குகளும் கருமங்களும் நீக்கப்பட்ட ஏற்பாடுகளின்கீழ் கையாளப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கிநிற்றல்

**22.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*